



ஓலை 67 | ஓசை 187 | ஏப்ரல் 2024

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்

## பொருள்

ஒழுக்கமே எல்லார்க்கும் மேன்மையைத் தருவதாக இருப்பதால், அந்த ஒழுக்கமே உயிரை விடச் சிறந்ததாகப் போற்றப்படும்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கிய பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## நிர்வாகக் குழு

**கு.செல்வமுத்துகுமரன்**

## ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

## வடிவமைப்பு

**ச.சூர்யா & அ.வில்சன்**

## அலுவலக முகவரி

**97, குஞ்சிதபாதம் நகர், டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

# உறவாடி மகிழ்ந்திடு!

ஞாலமிதில் வாழ்ந்திடவே ஞமலியாய் ஓடுவோர்
காலமிதில் உறவாடியே களித்திடுவார் யாரிங்கே?
பாலமாய் இணைத்திடவே பண்டிகைகள் வந்திடுதே!
தொலைவிலே இருந்தாலும் தொடரும் நாட்களிலே!

கரங்கள் இணைந்திடவே காரணங்கள் ஆகிடுதே!
சுரங்கள் கூட்டியச் சுகமானதொரு இசையாகவே!
வாய்ப்பிதனைக் கொண்டே வாட்டத்தைப் போக்கி
நோயழிக்கும் சிரிப்பில் நுழைத்திடலாம் மனத்தை!



சாளரம் தாண்டியும் செல்லாதக் கண்களுண்டு!
தாளாத நிலையிலே தடுமாறும் கால்களுண்டு!
கானலைக் கண்டோர்க்குச் சோலையைக் காட்டி
வேனல்மிகு வறியோரின் வேதனையைப் போக்கி

உள்ளத்தே உவகையுடன் உறவாட வேண்டுமிங்கு
வெள்ளமது வடிவெடுத்த வேகத்திற்குக் குறையாது!
அகத்தினிலே குளிர்விக்கும் அன்பினைக் கொண்டாடு!
முகத்தினிலே ஒளிர்ந்திடும் முறுவலின் துணையோடு!

எந்நிலையது வந்திடினும் இயலாதே தவிப்போர்க்கு
முன்னிலையாய் மனமுவந்தால் முடையும் விலகும்!
நாடியே பொருளுக்காய் நன்மைகள் தொலைத்தோம்!
கூடியே வாழ்ந்திருக்கும் கோலத்தையும் மறந்தோம்!

பெட்டகம் தன்னிலே பெரும்பொருள் குவித்தோம்!
சட்டமாய் நலிந்தோரைச் சலித்தே தவிர்த்தோம்!
பேதமிகு எண்ணங்களைப் பொசுக்கியே போட்டு
நேயத்தை வளர்ப்போம் நல்லுறவால் மகிழ்வோடு!

கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி

# தன்முனை அந்தாதி

## வாழ்க வளமுடன்

வாழ்க வளமுடன் என்றே
வாய் உரைக்கும்
எவர் அறிவார்
உள்ளத்தில் உள்ளுவதை
□
உள்ளத்தை கடுகளவும்
கள்ளமின்றி உள்ளாராய்வாய்
உள் புகுந்து
உள்ளதை உள்ளு
□
உள்ளுவது எல்லாம்
உண்மையாய் இருக்கட்டும்
மெய்மை அடைய
தள்ளிடு பொய்மையை
□
பொய்யாமை என்பது
வாய் வார்த்தையா?
மனதின் கண்
மாசற்ற நிறைவு
□
மாசற்றவர் வாய்
உரைக்கும் ஒரு
ஒற்றைச் சொல்
வாழ்க வளமுடன்
□




வளமுடன் வாழ்ந்து
ஆழ்ந்து அறம் செய்
ஊழ்வினை அறுபட
தாழ்விலா மாட்சியடை
□
மாட்சிமை அடைய
தகாத வினை மறையும்
வல்வினை நல் வினையாகும்
வாழ்வாய் வளமுடன்.

கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# விமரைக்கூக்கள்

பாமரருக்கும் புரிவதே கவிதை
பொழிப்புரை தேட இங்கு நேரமில்லை
மாற்றாந்தாய் பிள்ளையா புதுக்கவிதை?

போற்றிட வேண்டும் மரபு
அது மட்டுமே தங்கம் என்போரே
இலக்கணத்தில் இல்லையா திரிபு?

புதுமைகளை சுவீகரிப்பதே வழி
பழமையில் தொங்கிக் கொண்டு இருக்க
எப்படி வளரும் மொழி?

கட்டாயம் தேவை இலக்கணம்
மரபை மீறுதல் குற்றம் என்றால்
பாவம் உங்கள் தலைக்கனம்

கற்றுக் கொடுங்கள் கற்போம்
எளிதாய் புரிந்து கொள்ளும் வகையில்
வாருங்கள் சேர்ந்தே வளர்ப்போம்

விமரைக்கூக்கள்

# ராஜூ ஆரோக்கியசாமி

கவிஞர் ராஜு ஆரோக்கியசாமி, பிச்சாண்டார் கோவில்

# நீதி இல்லா நாடகம்

குறையற்ற சமூகத்தில்
குறை காண யாரும் இல்லை

குழம்பிப்போன குளத்தில்
தெளிவற்ற நீர் சுரப்பி இல்லை

குறையான நாட்டில் ஏராள நாடகம்
குறைக்கு குறை குரல் ஒன்றுமில்லை

குறை காணும் இடத்தில்
நீதியும் குறைந்து போனது

குறைய என்னும் ஏட்டில்
மனிதனின் மாண்பு



குறைவான குழுமத்தில் குடிசை ஏடுகள்
குறைவான உலகத்தில் ஏராள வறுமைகள்

குறுகிய பிரபஞ்சத்தில் விரிவான ஏடுகள்
குறுகிய தகட்டில் ஏராள பிரசுரம்

குறுகிய நெஞ்சம் இவ்வுலகில் மாபெரும் லஞ்சம்
குறையானது குறையானது குறைக்கு குரல்
சிறை ஒன்று நிலையானது.

கவிஞர் ம. செல்லமுத்து, நூத்தப்பூர்

# ஓலைக் குடிசைதாண்டா ஒருமுழப் பாய்தாண்டா

ஓலைக் குடிசைதாண்டா
ஒருமுழப் பாய்தாண்டா
ஓடிவரும் ஆற்றிலும்
ஓயாமல் குளிச்சவன்தாண்டா



ஞாயிற்றுக் கிழமையிலும்
நீச்சல் போட்டு
கந்தையானாலும் கசக்கி
கட்டியவன் நானடா

ஆலமரத்தடியில் ஊஞ்சலில்
ஆடிக்கழித்தவன் தானடா
ஆடிமாசக் காற்றிலும்
ஆகாசம் பார்க்காதவனடா

திண்ணையில் அமர்ந்து
திணைச்சோறு இரசிச்சே
தினமும் மனசாத்
தின்னவன் இவனடா

உண்ணும் உணவும்
உறக்கமும் காத்தும்
உலகில் இந்த
சுகத்தோடு கெடைக்குமாடா

ஊரின் மண்வாசனையும்
ஊதக்காற்றும் உள்ளவரை
ஊறுமடாநெஞ்சுக்குள்ளே
கேட்டுப்பாரு நெஞ்சுக்குள்ள

உழைக்க கத்துக்கிட்டா
பூமித்தாயும் சோறுபோடும்
கிராமத்திலே வாழும்
வாழ்க்கை சொர்க்கமடா

ஏரைத்தான் பராமரிச்சே
ஏமாற்றமல் பொழச்சாலே
வாழ்ந்த வாழ்க்கைக்கு
ஏராளமான அர்த்தமடா
வந்துபாரு தெரியுமடா

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# விளங்காத கவிதை

என் கவிதையின் நீளம்
அதிகமென்கிறார்கள்
வாசகர்கள்.
தேவைப்படுவதால்தான்
நீளத்தைச் சுமந்திருக்கிறது
என்கிறேன்.



என்னை விடுவதாயில்லை
வாசகர்கள்.
வார்த்தைகளை
உடைத்துச் சுருக்கி
குறுங்கவிதையாக்குகிறேன்.

இன்னும்
ஆழத்தை எதிர் நோக்குவதாய்
வாசகர் தரப்பிலிருந்து
வலுக்கிறது வாதங்கள்.
மேலும்
செதுக்கியதில்
துளிப்பாவாகிறது கவிதை.

தற்போது
ஒன்றுமே விளங்கவில்லை
கவிதையென
வாதிடுகிறார்கள் வாசகர்கள்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# முள் கிரீடம்

புதர் செடியில்
பற்றான தண்டு.
மெல்லிய முட்கள்
மேலே மலர்கள்.

மணம் வீசும்.
முள்ளும் குத்தும்.
குடும்ப உறவுகள்
குதூகலத்தில் மலராவர்.

வளம் குன்றிட
வாட்டம் மேலிட
வறுமையில்
உழல்வோரை
வளமுடையோர்
பரிகசிப்பர்.

வார்த்தைகள்
மனதில்
வேதனை
நிறைக்கும்.

கனக்கும் நெஞ்சத்தில்
குத்தும் முள்ளாய்.
தலையில் ஏறி
தாண்டவம் புரியும்.



முள் கிரீடமாய்
உள்ளே புண்ணாக்கும்.
அறவழி நடவாது
ஆதிக்கம் செலுத்துவோர்

அன்பை மறக்க
ஆணவம் தலைக்கேற
பணி செய்வோரைப்
பணிந்திடச் சொல்லி
முள்கிரீடம் சூட்டி
முனகலை ரசிப்பர்.

வாழ்வது ஒருமுறை
வாழ்த்த வாழ்ந்திடுக.
வறுமையில்
உழல்வோர்க்கு
முள்கிரீடமும்
மலர்கிரீடமே!

கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர்அணை

# ஆற்றில் போட்டாலும் அளந்து போடு

அன்போடு கருத்துக்களை பகிர்ந்து வாழ்வோம்
பண்போடு நாமே வாழ்ந்து காட்டுவோம்
சிறுகச் சிறுக சேமித்து வைப்போம்
சிறுதுளி பெருவெள்ளம் என்பதை உணர்வோம்
ஆற்றில் போட்டாலும் அளந்து போடுவோம்
ஆகாறு அளவுடையது என்றே வருந்தாதீர்
போகாறு சுருக்கினால் இன்பம் வந்திடுமே
எளிமை சிக்கனம் நன்மை கொடுக்கும்
ஆடம்பரம் என்றும் நம்மைக் கெடுக்கும்
தேவைக்கு ஏற்ப செலவு செய்வீர்
எல்லைக்கு மீறிக் கடனை வாங்காதீர்
தொல்லையைக் கைநீட்டி விரும்பி அழைக்காதீர்



கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

# அன்புள்ள அம்மாவுக்கு



கருவில் இருந்தபோதும்
கையருகில் இருந்தபோதும்
கனமான நேசமிருந்ததில்லை
கல்யாணம் ஆனபின்னே
கடினமானதே பிரிவும்
புக்ககம் சென்றபிறகே
புரிபடத் துவங்கியதே
அலைபேசி வந்திடவும்
அருகிப் போனதே தொலைவும்
அடுக்கடுக்கான கதைபேசி
அத்தனையும் பகிர்ந்திடுவாய்
அலட்சியம் செய்தாலும்
அமைதியேக் காத்திடுவாய்
ஆவலாதி சொல்லிஅழுதிட
அதைத் தூண்டிடாது
அனுசரிக்க சொல்லிடுவாய்
அந்த உன்செயல் எனக்கு
ஆங்காரம் அளித்தாலும்
அர்த்தம் புரிய காலமானதே
அழகர் ஆற்றில் இறங்கிடும்
அத்திருநாள் கணக்கிட்டு
பள்ளி விடுமுறைக்கு வர
பணித்திடுவாயே அம்மா.
பலர் சொல்வது போல மணி
பத்து வரை உறங்கியதில்லை
பலகாரம் ஊட்டியதுமில்லை
ஆயினும் ஆசையாக இருந்திடும்
அம்மா வீட்டிற்கு வந்திட

நீயில்லாத் திருவிழாவும்
நீருக்கடியிலலே சிக்கித்
தவிப்பதாக உள்ளதே.
நீயில்லாத வீடும்
நிலவில்லா வானமாகியதே
விடுமுறையும் திருவிழாவும்
வருடம்தோறும் வருகிறதே
வானகம் சென்ற உன்னை
வையகம் அழைக்க இயலவில்லையே

வாய்விட்டு அழுதாலும்
வாஞ்சைக்கு ஆளில்லையே
வாய்ப்பளிப்பாயா அம்மா
வயிற்றில் மீண்டும் வந்திட.

கவிஞர் லீலாதேவிஅருணாசலம், நாகர்கோவில்

# மனதைக் கொய்திட்ட மதிமுகமே

இதயவானில் ஒளிரும்
முழுமதியும் நீதானே

உலவும் தென்றலாய்
தேகத்தைத் தழுவுகிறாயே

பூமியில் நடைபயிலும்
சந்திரனாகிய சகியே

உந்தன் பிம்பத்தில்
உள்ளமும் உருகிடுதே

புருவ வில்லினால்
காமனம்பை எய்கிறாயே

அதரங்கள் அமுதமாகிட
அன்பில் அடைக்கலமானேனே

சுவாசக்காற்றில் சுழன்று
இதயத்தில் உயிரானாயே

கவிதைக்குக் கற்பனையாக
வரிகளில் கலந்திட்டாயே

புன்னகைப் பூக்களால்
நறுமணம் வீசுகிறாயே

மௌனத்தின் மொழியால்
மயக்குகிறாய் காரிகையே



அழகான அன்னமே
தேன்சுவைக் கன்னமே

பசியேதும் இல்லையே
பாவையுன்னைக் காண்கையிலே

புள்ளிமானாய்த் துள்ளியே
வருகிறாய் கண்ணே

நித்தமும் நினைவினில்
நின்னையே சரணடைகிறேனே

கனவினில் கனிவாகியே
நினைவினில் கலந்தாயே

எந்தன் மனதைக்
கொய்திட்ட மதிமுகமே.

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# காதல் மட்டும்!

ஆசுவாசங்களின் ஆறுதல்
குரலற்றவர்களின் குரல்கள்
ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

வாழ்வின் கனத்தை
மௌனத்தால் சுமக்கிறார்கள்.
எல்லா விஷயங்களுக்கும்
தார்மீக பொறுப்பை ஏற்கிறார்கள்.

எப்போதும் எதையேனும்
விடாது பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்.
சிறிய வைராக்கியங்கள்
நிறைய சேமித்து வைத்திருக்கிறார்கள்.


சிறிய விஷயங்களில்
நிறைவு காண முடிகிறது அவர்களால்.
தனித்துவமிக்க குணாதிசயங்களினூடாக
வெப்பம் மிகுந்த வாழ்வை
கடந்து செல்கிறார்கள்.

பெரிய குற்றச்சாட்டோ
பரிதாபமோ இருப்பதே இல்லை.
கையறு நிலையிலும்
உறுதியான மனம் கொண்டிருக்கிறார்கள்.

'துயரம் பொறுத்தலும்',
'மாறிக்கொண்டே இருக்கும் காலமும்',
எதையும் நிகழ்த்தவில்லை அவர்களிடம்.


காலம் குறித்த பிரக்ஞையும்,
ஆழ்படிமங்களும் உறைந்து போயிருக்கிறது.
நீர் இறுகி பனிக்கட்டியாவதைப் போல்,
மனம் இறுகி கெட்டி பட்டுப் போயிருக்கிறது.

பாரம் சுமந்து நடப்பவர்கள் இளைப்பாற
சுமைதாங்கிக் கல்லாக உருமாறி
ஆசுவாசப்படுத்திக் கொண்டே இருக்கிறது
காதல் மட்டும்!



கவிஞர் ஸ்ரீநிவாஸ்பிரபு

# எழுதுகோல் நாயகன்



எழுதுகோல் கொண்டு செங்கோலாய் நின்றாய்
எழுதிய வசனங்களை அனலாய் பரப்பினாய்
எளிமையான கருத்தினைப் பாமரனுக்கு தந்தாய்
எதிர்பார்ப்பையும் ஏற்றுக் கொண்டு ஏணியாக்கினாய்
எண்ணற்ற படைப்பை கவியால் படைத்தாய்
எழில்மிகு காவியங்களுக்கு புகழ் சேர்த்தாய்
எண்ணத்தை எல்லாம் எழுத்தில் காட்டினாய்
எத்திசையும் புகழ் மணக்கச் செய்தாய்
எழுச்சி உரையை கேட்கவும் செய்தாய்
எதற்கும் அஞ்சாத சிங்கமாய் நின்றாய்
எப்போதும் மக்களுக்காக வாழ்வாங்கு வாழ்ந்தாய்
எம்மதமும் சம்மதமென ஏற்றுக் கொண்டாய்
எழுத்துலகில் தடங்காட்டி யாய் ஆளவும் செய்தாய்
எத்தனை படைப்புகளுக்கு நீ சொந்தமானாய்
என்றுமே கையில் எழுதுகோலைப் பிடிப்பாய்
எங்கெங்கும் கலைஞராய் காணுமிடத்தில் நிற்பாய்
எங்களுக்கு எழுத வழிக்காட்டி ஆனாய்
எப்படி இருப்பினும் தமிழுக்கு ஆதரவானாய்
என்றுமே உலகை அதிர வைத்தாய்
எழுதுக்கோலை உனது இறுதி மூச்சாய்
எழுப்பிப் பார்த்தாலும் நீ எழுந்திராய்
எழுந்திராய் எழுந்திராய்
மீண்டும் எழுந்திராய்.

*கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்*

# பள்ளியிலே பயிலலாம்

பலகலை உருவாக்கி
பல்கழகத்தில் அனுப்பினேன்

கட்டிடங்கள் உயர்ந்திருக்கும்
கட்டியணைக்கும் பாசத்தில்

பாதம் படைக்க
படிக்கட்டுகள் பல்லிளிக்கும்

விருஷமாய் விருஷங்கள்
வருஷமாய் பூத்திருக்க

வாடாத மலராய்
மத்தாப்பு ஆசிரியர்கள்

ஓடியாடி விளையாட
ஓய்வறியா மைதானங்கள்



எண்ணற்ற தலைமுறைகள்
ஏற்றத்தை கொடுத்தேனே

முத்தான முத்துக்களை
முதல்வரே ஈன்றிட

கவலைகளை களைத்திட்டு
காலங்களை வென்றிடுவேன்

எண்ணற்ற பதவிகளை
என்னிலே உறைந்து

செபாஸ்டின் பள்ளியிலே
சொர்க்கத்தையும் மறந்தேனே

பரிசுத்த பள்ளியாய்
பாசத்தை அளித்தேனே

*கவிஞர் ஏ. தேவராஜ், சென்னை*

# மணிமேகலை (ஏழு)



6. சக்கரவாளக் கோட்டம் உரைத்த காதை .

1 மணிமேகலா தெய்வம் — சுதமதி

மணிமேகலா தெய்வம் உவவனத்தில் சுதமதியிடம் கேட்டது
பணிவோடு கூறினாள் ,'' உதயகுமரன் மேகலையை துரத்துகிறான்
அணிமையில் வந்துவிட்டான் அவனுக்காகவே இங்கே நிற்கிறோம்
துணிவோடு விலக முடியவில்லை அவன் ஒரு அரசிளங்குமரன்
"பெரும்தெருக்கள் வழியே போகவேண்டாம் அவன் பின்தொடர்வான்
அருகருகே சிறு சிறு வழிகளில் செல்லுங்கள் பின் தொடர்வது சிரமம்
வருபவனை தடுக்க இதுவே சிறந்தது , மேகலையை அழைத்துச் செல்
தருமம் மிகு மாதர் வாழும் சக்கரவாளக் கோட்டத்தை அடையலாம்"

"அந்த இடம் நான் அறிந்தவரை சுடுகாட்டுக் கோட்டம் அல்லவா ? சுதமதி
இந்த இடம் புகார் நகரின் பிணம் சுடும் காடு நான்கு வாயில் கொண்டது
வந்து கொண்டே இருக்கும் பிணங்கள் முதியோர்ஆண் பெண் சிறுவர்
வெந்து தணியும், புதைக்கப்படும் பிணங்கள் இரவும் பகலும் ஓயாது
நான்கு வர்ண குல மக்கள் தனித்தனி வாயில் பிணம் கொண்டுவர
ஈங்கு இறந்தவர் உறவினரக்ள் அழுது அரற்றும் ஒப்பாரி ஓலமிடும்
ஆங்கு நரி, ஆந்தை, கோட்டான்கள் அலறலும் நிறைந்திருக்கும்
தீங்கு செய்தார் நன்மை செய்தாருக்கு சமமான காடு சுடுகாடு"



சார்ங்கலன் வரலாறு:

சுடுகாட்டினைக் கடந்து பயமின்றி சென்றான் சிறுவன் சார்ங்கலன்
தடுத்து நிறுத்த யாரும் இல்லை பெண் பேய் ஆடிக்கொண்டிருந்தது
சடுதியில் அப்பெண் பேய் சிறுவன் முகத்தில் அறைந்து வீழ்த்தியது
மிடுக்கான சிறுவன், 'அம்மா என்னைக் காப்பாற்று', அலறினான்

தாய் கோதமை மகனைத் தழிவிகொண்டு வெளியில் வந்தாள்
வாய்விட்டு கதறினாள் இவனைக் காப்பாற்ற யாருமே இல்லையா
தாயாகிய எனக்கு வேறு துணை இல்லையே எப்படி வாழ்வேன்
"தாயே சம்பாபதி தெய்வமே, என் மகனை காத்தருள் அம்மா?"

"இந்தப் பாவியின் கதை கேள் கணவனும் கண் இல்லாதவன்"
அந்தத் தாயின் குரல் கேட்டு தோன்றினாள் சம்பாபதி கடவுள்
"பந்தமானாலும் பாசமானாலும் போன உயிர் திரும்புமா சொல்
வந்து உன் துயரை நீக்க என்னால் முடியாது புரிந்து கொள்"
சம்பாபதி தெய்வம் இறந்த மகனுக்கு உயிர் தர மறுத்தது
எம்மாலும் இயலாது சாதல் எல்லோருக்கும் பொதுவானது
இம்மையும் மறுமையும் நம் கையில் இல்லை இதை உணர்க.
நிம்மதி தேடி மூட்டிய தீயில் மகனோடு தாயும் உயிர் நீத்தாள்

சுடுகாட்டுக்குப் பக்கத்தில் இருப்பது சக்கரவாளக் கோட்டம்
வடிவமைத்துக் கொடுத்தவர் தெய்வத் தச்சனாகிய மயன்
நடுவே மேருமலையும் பெருந்தீவுகள் அமைந்துள்ளன காண்க
சுடுகாட்டுக் கோட்டம் என்ற வேறு பெயரும் இதற்கு உண்டு.

இந்த மண்ணின் சுக துக்கத்தோடு வாழ வந்தவள் அல்ல இவள்
எந்த உணர்வுகளுக்கும் கட்டுப் படாமல் வாழ வேண்டியவள் இவள்
மனித வாழ்க்கையின் நெறிமுறைகளை அறிந்தாள் மணிமேகலை
இனி இவள் இங்கே இருக்கக் கூடாது தனியே பாதுகாக்க வேண்டும்
கதிரவன் மறைய மாலைப் பொழுது இருள் மிகுந்து யாமம் ஆயிற்று
விதியின் கரத்தில் சுதமதி மனிமேகளை நித்திரையில் இருந்தாள்
பதில் கூறாது மணிமேகலா தெய்வம் மேகலையை தூக்கிச் சென்றது
மணிபல்லவத் தீவில் விட்டுவிட்டு மணிமேகலா தெய்வம் நீங்கியது

...தொடரும்

கவிஞர் ந. திருக்காமு

# உன் தங்கையாய் பிறந்ததற்கு!

ஒரு கொடியில் உள்ள மலர்களை போன்றது
என் உன் உறவு
பந்தத்தை யாராலும் பிரிக்க முடியாது!

பாசம் பலவகை
அதில் வேசமில்லா பாசம் உயர்வகை
எனினும் அண்ணன் பாசம் தனிவகை....

சகோதரப் பாசமெனும் சாகரத்தில்
மூழ்க வைத்து சந்தோஷத்தில் மகிழ வைக்கும்
உற்சாக உறவு
அண்ணா.

உன் ஆதரவையும்
தன்னம்பிக்கையையும் பெற்றதனால்
நான் அடைந்தேன்
வெற்றி.

முழு சுதந்திரத்தையும் அளித்த
நண்பனும் நீயே!
என் உடன் பிறப்பும் நீயே!

ஆயிரம்தான் உன்னிடம் சண்டை இட்டாலும்
பேசாமல் இருக்க முடிவதில்லை!
இருக்க முடியாது!

ஒவ்வொரு தங்கையின் மிகப் பெரிய கர்வமே!
தனக்காக ஒரு அண்ணன் இருக்கிறான் என்பதே!
எனினும் எனக்கோ
இரண்டு அண்ணன்மார்

யாரிடமும் என்னை விட்டு கொடுக்காதவன்
என் அண்ணன் எனக்கென எதையும்
விட்டு கொடுப்பவனும் அவனே!

என்ன தவம் செய்தேனோ?
உன்னை என் அண்ணனாக பெற.

எனக்கு எதுவென்றாலும்
என் அண்ணன் வருவான் என்று
எண்ணும் பெண்களில் ஒருவள் நான்
இந்த நம்பிக்கையே அண்ணன்மாரின் பலம்.

நீயே என் கவி! உனக்கென
என் கவியே இது!



கவிஞர் ஜவ்பர் றிப்கா, ஹொரவப்பதானை (இலங்கை)

# நேசம் கடக்கும் கவிதை



நேசம் கடக்கும் கவிதையே
என் இளவரசியின் வீடு வரை
சென்று விடு

கண்ணீர் சிந்த வைக்கும் கவிதையே
என் கண்ணம்மா கண்களில் பட்டுவிடு

யார் யாருக்கோ உதவும் கவிதையே
எழுதும் எனக்கும் கொஞ்சம்
மனம் இறங்கி விடு

காதலின் தூதாக உன்னை அனுப்புகிறேன்
அவளின் மனதில் கொஞ்சம் காதல்
துளிர்விட செய்து விடு

அவள் உறங்க செல்லும் நேரமோ இல்லை
கண் விழிக்கும் நேரமோ சாலையில் நிற்பாளோ
இல்லை வீதியை கடப்பாளோ

தட்டிவிட்டு செல்வாளோ காது கொடுத்து கேட்பாளோ
தாக்கம் கொடுக்காமல் தள்ளிப்போக விட்டுவிடாதே

தூக்கத்திலும் மறுமுறை உன்னை பார்த்து விட செய்துவிடு.
காது கொடுத்து கேட்டு விட செய்து விடு

காதல் தீயை கொஞ்சம் உரசி விட்டு சென்று விடு.

கவிஞர் சாதீக் பாத்திமா சமீஹா, மூதூர் (இலங்கை)

# நேரம்

நேரம் போவதே தெரியவில்லை,
நீ என்னுடைய அருகில் இருந்தால்.

நேரம் போகவே மறுக்கிறது,
நீ என்னைவிட்டு தொலைவில் இருந்தால்.



கவிஞர் ப. சுரேகா, திண்டுக்கல்

# இருசொல் தாராயோ



இடஞ்சலான வாழ்விலே,
இளையவளான எனை சுமந்தாய்,
இடரும் பல நீ பெற்றாய்,
இருக்கின்ற செல்லமும் எனக்கே,
இல்லையென்று சொல்லாமலே,
இதுவரை எனக்களித்தாய்,

இறுதிவரை உன் பாசத்துக்குரியவளாக,
இருக்கவேண்டுமென நினைத்தேனே,
இடையில் நுழைந்த காதலுமே,
இடைவெளியாக்கியதே இருவரையும்,
இன்பத்திற்காக இணையவில்லை,
இன்னல் துடைத்திடவே ,

இல்லம்விட்டு உன்னை விட்டு,
இமைதெரியா தூரம் வந்தேனே,
இமைமூடும் நேரமெல்லாம்,
இதழ் புன்னகையோடு நீ வந்தாய்,
இடரில்லாமல் நீ இருந்திடுவாய்,
இளையமகள் நான் நினைத்தேன்,

இசையாக மகிழ்ந்த வாழ்வுமே,
இதமில்லா இசையானது,
இட்டு நீ கற்றுகொடுத்த வாழ்வியல்,
இதிகாச பாடங்களால்,
இதுவரை பெயர் பாராட்டோடு,
இருக்கின்ற இடத்திலெல்லாமே,

இனமான பேச்சாக மகிழ்ந்தேனே,
இவ்வளவும் கொடுத்த நீ,
இழிவாக என் மணத்தையெண்ணி,
இடிந்த கோபுரமாய் சரிந்தது ஏனோ?
இதுவரை புரியாத புதிரானதே,
இவையெல்லாம் ஏன் செய்தேன்?

இருந்து சுமந்த உன் மனது அறியவில்லையா?
இரு ஏழு ஜென்மம் உன் மகளாக,
இருகரம் கோர்த்தே,
இதயக்கோவிலில் ,
இருந்து உன் ஆசையை,
இறுதிவரை நிறைவேற்றுவேன் தாயே,

இத்தனை கேட்டும் எனை மன்னிப்பாயா,
இறைவனிடமே கேள் நியாயத்தை,
இந்த நிலை ஏன் என்று,
இதுமாற என்ன செய்ய,
இருசொல் தாராயோ,
இவள்தான் என் மகளென்றே!

கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்

# கடலோடிகள்



மனைவி மக்களை பிரிந்து
நாள் கிழமை விசேஷ தினங்களில்
குடும்பத்தாரோடு இல்லாமல்
பிழைப்பு தேடி ஓடும் கடலோடிகள்!
பசி தாகம் தூக்கம் மறந்து
படும்பாட்டை பகிர முடியாமல்
நெஞ்சக்கூட்டில் பொத்தி வைத்து
கடலின் ஆழம் வரை சென்று
வலைவீசி மீன் பிடிக்க!
கடல் அன்னை ஏமாற்றாமல்
கைநிறைய அள்ளிக்கொடுத்து
அரவணைத்துக் கொள்ள!
நல்லபடியாக கரை திரும்பினால்
காதலோடு கொஞ்சி மகிழ!
கள்ளச் சிரிப்பை உதட்டோரம் தேக்கி வைத்து
மழலையோடு காத்திருக்கும் மனைவியவள்
மனம் மகிழ கரை சேரவேண்டும்!
வேண்டுதலோடு தினம் தினம்
கடலில் பயணம் போகும் கடலோடிகள்!

கவிஞர் லதா சுப்ரமணியன்

# பிரிவு



பரிவில் வரும் பாசமும் பிரிவில் முடிவாகிறதோ
தேர்வில் வந்த நேசம் தெரிவில் முடியுமோ
துயரில் வந்துது பறிதவிப்பால் தோன்றி
வெகுமதியற்று போகுமோ
கைத்தொடா தூரமென்றால் நெஞ்சம் நிறைவாகி
தினப்பொழுதும் பேசும் பாசம்
சில காலமதில் காணாது போகுமென்றால்
நம்பப்படுவதில்லையே
நம்பிருக்க வேண்டும் என்றுரைக்கின்றனர்
பிரிவை பரிசென்றாக்கி

மழைக்காலத்தை எட்டிப்பார்க்க வரும் வானவில் போல
காத்திருக்கும் நேசமெல்லாம் மறைவில் காண்கிறது மனது
நம்பித்தொலைக்கிறோம் உணர்வை அள்ளிக்கொட்டி
பொய்த்திடதான் செய்கிறதே சில கணத்திலே
காலமதில் கலங்கரை தீபமாய்
நெஞ்சோடு நீந்தும் நினைவின் தோன்றலே
அன்பே நீ எனன்பே காத்திருந்து பேசிவிடும் கணத்தை
தகர்த்து மௌனித்திட கற்று கொடுத்தாய்

உண்மையாக காத்திருந்தாலே
காயத்தைப் பரிசாக்கிச் செல்கினரே
பிரிவில் விட்டு செல்வோருக்கு வலிதான் இல்லையோ
விட்டொதிங்கிட முனைப்பைக் கொடுத்தாலுமே
வலிகள் பரிசாகி பிரிவில் நனைந்து
துயராகி நினைவில் சுமக்குமே

கவிஞர் சஹீனாஸ் பேகம், புத்தளம் (இலங்கை)

# காதல் வீதியிலே! (உன்னை கண்ட நாள் முதல்)

உன் புருவ வில் நாணேற்றி பாய்ச்சிய
விழிமுனை அம்புகள் தாக்கி வீழ்ந்தேன்
விளக்கில் விழுந்த விட்டில் பூச்சியாய்.
********

இரவு உடைக்கு நீ போடும் துப்பட்டாக்கூட
என்னை துவள வைக்கிறது உன்னோடு
அது பறக்கும் திசைக்கு.
********

உன் மேல் விழுந்த மழைத்துளி கூட
பரிகாசம் செய்கிறது என்னை பார்த்து
உன்னைவிட நான் பாக்கியக்காரனென்று.
********

அள்ளி முடிந்து விடு உன் அழகான கூந்தலை
அசையும் திசையெல்லாம் என்னையும்
அதனோடு அலைப்பாய வைக்குதடி.
********



நீ சூடும் மல்லிகையில் மாட்டிய மனம்
இளகிய பனி மலையாய் சறுக்கி
உன் காலடி வருடி ஓடுதடி.
********

உன்னைக் கண்ட நாள் முதல்
பிடித்த பித்தம் தெளிய மருந்தாய்
பிடிவாதம் பிடிக்காமல் வந்துவிடு.
********

அழைப்பு மணி அடித்து காத்திருக்கிறேன்
இதயவாசல் திறந்து உன் மன வீட்டில்
குடியேற சம்மதம் சொல்வாய் என்று.

கவிஞர் ஆனந்த் குவை. ஜெயராமன்

# மது

வியர்வை கொட்ட உழைத்து,
உடல் வலிக்க சுமை தூக்கி,
உறவுகளை காண வரும்
மாலை பொழுதில்
களைப்பென்று சொல்லி
மது அருந்தி மயக்கமுற்று,
தடுமாற்றதுடன் மனைவியிடம்
சண்டைப்போடும் நிகழ்வும்,
அப்பாவின் வருகையை
எதிர்ப்பார்த்து இறுதியில்
பயத்துடன் ஒதுங்கி நிற்கும் குழந்தை,
வங்கிகடன் கட்ட
காலையில் கலங்கி நிற்கும் மனைவி
இத்துணை காட்சியையும்
கண்ட பிறகாவது
உன் குடும்பத்திற்காக வாழ
கற்று கொள்
மறு நாளிகையிலே
வசந்தம் வீசி
வளமும் நலமாய்
மாறும் உனது வாழ்க்கை.




கவிஞர் ரெ. மாணிக்கவேல், நீடாமங்கலம்

# எம் ஆசானே ரமழான்!

விண்ணில் பிறை மலர
மண்ணில் மனிதர்கள் புதுமை பெற
அருள் நிறைந்த புனித ரமழான்
மனித மனங்களில் குடியேறியது

பாவங்களை சுமக்கும் மனிதர்களை
பாவக்கரை நீக்க உதவுகிறது
அல்லுறும் மனிதர்கள் யாவரையும்
இறை அருள் மழையில் நனைகிறது

எடுக்கும் கரங்களை எல்லாம்
கொடுக்கும் கரங்களாக மாற்றுகிறது
விதைத்த துன்பங்களை எல்லாம்
இன்பங்களாக வடிவமைக்கிறது



அழுக்குகள் அற்ற இதயமதை
உருவாக்கிட வழி வகுக்கிறது
சொல் செயல் யாவையும்
ரமழான் சீர் செய்து விடுகிறது

உயிர் முழுவதும் ஊடுருவி
பரிசுத்த ஆன்மாவை எழுப்புகிறது
நரக பாதைகளை மூடிவிட்டு
சுவனத்திற்கு வழி காட்டுகிறது

பயன் தரும் ரமழானை நாம்
பயன்படுத்தும் விதமதை சிந்திப்போம்
நம்மை சீர் செய்யும் ஆசானே ரமழான்
சிறந்தே அதனில் பயன்பெறுவோம்

கவிஞர் அகீலா ஜவுபர், ஏத்தாளை புத்தளம் (இலங்கை)

# வல்லமை தாராயோ

சோர்வு தனை விடுத்து சுறுசுறுப்பை பாதையாக்கி
வெற்றிக்கனி எட்டிடவே வல்லமை தாராயோ?

கானல் நீராய் மாறிப் போகாத வண்ணம் பசுமையாய்
இயற்கை அன்னையை வளப்படுத்தும் வல்லமை தாராயோ?

விழிகளால் காண்பது மட்டுமே உண்மை என்பதனை விடுத்து
ஆராய்ந்து நிதர்சனத்தை உணர்ந்திடும் வல்லமை தாராயோ?

பெண்டிரை போகப் பொருளாகக் கண்டிடும் கயவர்களை
கரம் கொண்டு தாக்கும் வல்லமை தாராயோ?

சாதி மத வேறுபாடின்றி அனைவரும் சமமென்ற உண்மைதனை
உரக்கக் கூறிடும் வல்லமை தாராயோ?



அடிமைத்தனத்தையும் ஆடம்பர மோகத்தைத் துறந்து
இயல்பு வாழ்வை வாழ்ந்திடவே வல்லமை தாராயோ?

கையூட்டு களைந்து செய்திடும் செயல்களில்
நேர்மை கொண்டிடும் வல்லமை தாராயோ?

மது, மாது என்னும் மாயைகளிலிருந்து விடுபட்டு
நல் மனிதனாய் வாழ்ந்திடும் வல்லமை தாராயோ?

இருப்போர் இல்லாதோருக்கு இல்லை என்று கூறாது
இறைஞ்சும் முன்னரே கொடுத்திடும் வல்லமை தாராயோ?

தூய்மையான வளிதனை சுவாசித்து வலியச் சென்று உதவி
வளமான வாழ்வுதனை அனைவரும் வாழ்ந்திட
வல்லமை தாராயோ இறைவா!

*கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி*

# தொப்புள் சொந்தம்



உயிர்க்
கொடியில்
நல்ல மரங்களை
உருவாக்குபவள்
தாய்தான்
□□□

தொப்புள் சொந்தம்
சுடுகாடு தாண்டி
சொர்க்கம் வரைக்கும்
□□□

தொப்புள் கொடியறுத்து
கருவறை கழன்ற
உன் வலியை
உணர்ந்தேன்
நான்
தாயான பொழுதில்
□□□

புனிதம் என்ற சொல்லுக்குப்
பூர்வீக சொந்தக்காரி
நீதான்
□□□

பிறவியெடுத்தலின்
முதன்மை
மேன்மை
உன்னால் தான்
□□□

என் முதல் மொழி நீதான்
மொழிக்கு முதலான ஆசான்
நீதான்
□□□

இரத்தத்தினால்
இதயத்தில்
அன்பெழுதுவாள்
□□□

இரு கண்களில்
கருணையின் கடலைக்
காட்சிப்படுத்துபவள்
□□□

எல்லையற்ற
தன்னலமற்ற
தார்மீக
நேசத்தின் சொந்தம்
தொப்புள் சொந்தம்

கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# பள்ளி வகுப்பறை

தாயின் அரவணைப்பை கடந்து
சென்று அமர்ந்த அடுத்த கருவறை.

அறிமுகமில்லா நட்பை
அறிமுக படுத்திய முதல் அறை.

அன்னைக்கு அடுத்து நம்மை
அரவணைக்கும் தாயையும்.

கண்டிப்புடன் வழிநடத்தும்
தந்தையையும்.

நமக்கு அறிமுகப்படுத்திய
உன்னத இடம்.



வெவ்வேறு திக்கில் திரிந்த பறவைகளை
ஒரு கூட்டு பறவைகளாய்
இணைக்கும் அழகிய கூடு.

உலகை நமக்கு அறிமுகப்படுத்திய
முதல் அறை.

நம்மை நமக்கு
அறிமுகப்படுத்திய இடம்.

உள்ளே நுழையும் போதும்
வெளியே செல்லும் போதும்
நமக்கு அழுகையை
பரிசளித்த இடம்.

மீண்டும் அமர வேண்டும் எனும்
ஏக்கத்தை அளிக்கும் இடம்

தாயின் கருவறைக்கு
அடுத்து நாம் மீண்டும்
அமர முடியாத
சிம்மாசனம் பள்ளியின் வகுப்பறை.

கவிஞர் ஜோ மஞ்சீ, மருங்கூர்

# பணம்

குணத்தை பார்த்து பழகிய காலம் போயே போச்சு!
பணம்தான் வாழ்க்கை என்ற நிலையும் ஆச்சு!
உண்மை அன்பு பாசம் எல்லாம் கனவா போச்சு!
உயிராய் பழகும் இதய நட்பும் பொய்யா போச்சு!
குணம் கொண்ட மனிதர் எல்லாம் வாழ்ந்த பூமி!
இன்று புழுதி வாரி தூற்றும் நிலையும் ஆகிப்போச்சு!
பணம் தான் உலகம் என்று உறுதியாச்சு!
உண்மையான அன்பு எல்லாம் கனவா போச்சு!
ஆனாலும் பணமே வாழ்க்கை இல்லை!
இது பதரான மனிதனுக்கு புரியவே இல்லை!
வாழும் காலம் சொர்க்கமா மாற வேண்டும்
அதற்கு மனம் படைத்த மனிதர்களோட கூடி வாழணும்!
காசு பின்னே பித்து பிடித்து ஓடும் மனிதன்
தனிமையாய் துறவு கொண்டு நொந்து வாழும்!
நிலைமை மாற வேண்டும் எனில் அன்பு வேண்டும்!
ஊரும் உறவும் சேர்ந்து வாழும் பண்பு வேண்டும்!
வாழ்க்கைக்குப் பணம் வேண்டும் தப்பில்லையே!
பணமே வாழ்க்கை என்றால் நிம்மதி இல்லையே!



கவிஞர் ஜேப்பி. பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# வண்ணக் கனவுகள்



வண்ண வண்ண கனவுகள்
வானளாவிய கனவுகள்
வண்ணமயமாக கனவுகள்
விண்ணோக்கிய கனவுகள்
விசித்திரமான கனவுகள்
விம்பி விம்பி கனவுகள்
வியத்தகு கனவுகள்
வறுமையிலும்
வண்ணம் வண்ணமாய் கனவுகள்
காண்கிறான் ஏழை இளைஞன்
வனப்பு மிகுந்த கனவுகள்
வளர வளர கனவுகள்
வளர்ந்திடவே கனவுகள்
வாழ்த்துவோம் சீக்கிரம் வளரட்டும்
அவன் கனவுகளும்
நினைவாகட்டும்!

கவிஞர் தினேஷ் கண்ணா, வழுதாவூர்

# அரோகரா, கழுகாசல மூர்த்திக்கே அரோகரா!

கழுகுமலை முருகனுக்கு அரோகரா அந்தக்
கழுகாசல மூர்த்திக்கே அரோகரா.
கருணையுள்ள கடவுளுக்கு அரோகரா அந்தக்
கந்தசாமிக் கடவவுளுக்கே அரோகரா.

குடைவரைக்கோயில் கொண்டவனுக்கு அரோகரா அந்தக்
குகனுக்கே என்றுமுரை அரோகரா.
கூவுகின்ற சேவல் கொடியோனுக்கு அரோகரா அந்தகத்
தோகைவிரித்தா டுகின்றமயிலோனுக் கரோகரா.

தேர்தல்பணி பயிற்சி வகுப்பிற்குத் திருச்செந்தூர்
வாவென எனையழைத்த செந்திலனோடு
திடீர் போட்டியிட்டு அடியேனையங்குச் செல்லும்முன்
வாயென் மண்ணுக்குத் தேர்வுப்பணிக்கென
வரவைத்த வள்ளிமணாளா சுப்பிரமணிய தேவா
தெய்வானை நாயகாவுனக்கே அரோகரா.



தமிழகத்தின் எல்லோரோ, வேலவனே, கந்தா
உந்தன் கழுகுமலை அன்றோ.
தம்பி இறந்த துயரம் தாங்கி
இராமன் சொன்ன சொல்லையேற்று
உந்தன் பாதம் பணிந்திறுதிக் கடனாற்றிய
சம்பாதியெனும் கழுகுமுனிவர் விரும்பியுறைய
கழுகுமலை யானமலையில் இயற்கையாய்த் தோன்றியதால்
கழுகாசலமூர்த் தியானவனே அரோகரா.

சிற்பக்கலை வரலாற்றில் பாண்டியர் பெருமைபேசும்
திருக்கோயிலெழுந் தருளியவா அரோகரா.
சிறப்புமிக்க கழுகுமலை பிள்ளைத்தமிழின் தலைவனே
குமார தெப்பத்தைத் தீர்த்தமாகவும்
மலைக்குன்றை தலவிருட்சமாகவும் கொண்டு அருள்புரியும்,
மலையிருக்குமிடமெல் லாம்கோயில் கொண்டவராக,
மாயோன் மருகோனே மனமகிழ்ந்து தமிழ்ப் பாடலுக்கு
அருள்பவனே சித்தர்தலைவா அரோகரா.

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

# கனவில் வந்த காரிகையே

காற்றிலாடும் நீண்ட
கருங்கூந்தல் மணந்தது
மணந்த கூந்தலில்
மல்லிகை சூடியிருந்தாள்

நேர்வகிடு எடுத்த
நெற்றியில் நெற்றிச்சுட்டி
கருமைத் தீட்டிய
கருவிழியுடைய பெண்ணவள்



காதல் கீதமிசைக்கும்
காதணி ஆடிவரும்
மூக்கழகை எடுப்பாக்கும்
மூக்குத்திப் பளிச்சிடும்

செவ்விதழ் மலர்ந்திட
பூக்கும் புன்னகையரசி
என்னையே மயக்கிடும்
அன்னவளின் பேச்சு

காதலோடு பேசினாள்
காதலியாய் பேசினாள்
கனவில் வந்த
காரிகை யவளே

நனவில் வருவதும்
நற்றுணையாய் மாறுவதும்
எந்நாள் காத்திருக்கிறேன்
காதலோடு காதலோடு.

கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

# பிரஞ்ஞை

விடியலுக்கு முன்
துவங்கிய ஓட்டத்தில்
ஒரு கோப்பை தேநீர்
தனையிழந்து எனை மீட்டது

நினைவுகளின்
மீட்பிலிருந்து விடுபட மீதமுள்ள
எந்த கோப்பை தேநீர் பருகுவது

எதை நிரூபிக்க
இந்த ஓட்டமென
மூடிய இமைகளில்
வந்தமர்ந்தது பட்டாம்பூச்சி

இவள் இத்தனை
மென்மையோ யென
இறகசைக்காது மெல்ல
பறந்து சென்றது



கவிஞர் ஜெயப்பிரபா, சென்னை 81

# வழிகால் தேடும் வாசல்

எங்காவது போயேன்
என்றது மனம்
நித்திய காலமும்
நினைவுக்கடலில்
அலைகளின் சத்தங்கள்
ஆட்டிபடைக்குது அலறவும்
வைக்குது

வாய்விட்டு சொல்லாத
அழுத்தங்களின் கூப்பாடு
அழைத்து செல்ல சொல்கிறது



மனமென்று மனமே
ஆதுரமாய் அணைத்தது
வடிகால்கள் தேடும் வாசல்கள்
குழம்பிய எண்ணத்தை
கொட்டி வைத்து ரசித்திட
மறைவிடம் தேடுது

போகுமிடமெல்லாம்
பெருமிரைச்சலில்
புல்லாங்குழலின் மொழியில்
இமை திறக்க மறந்தது

எங்கே அந்த கணம் தாங்கிய
நிமிடங்கள்
வளைத்து போட்டு தாலாட்டும்
இசைக்கூடல்

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன், திருப்பூண்டி

# தனிமையின் பாடல்

தனிமையில் பாடல் இனிது
தனிமையை ரசிக்கும் வரை.
நினைவினில் பாடல் இனிது
நிலையாய் நிற்கும் வரை.
காற்றில் வரும் கீதம்
காதோரம் கேட்கும்.
இதயம் தொட்டே
இமைமூட மறுக்கும்.
விழி மூட நினைத்து
விழிகளும் குளமாகும்.
இனிமையில் ராகம்
இன்னிசை பாடும்.
தனிமையில் ராகம்
தன்னிலை உணர்த்தும்.
பிறந்ததும் கேட்கும்
இதமான தாலாட்டு உறங்க வைக்கும்.
இறுதியில் கேட்கும் ஒப்பாரி
இதயத்தை கிழித்து உறங்க மறுக்கும்.
நிலையில்லா வாழ்க்கையில்
நித்தமும் கேட்கும் பாடல்கள்.
தனிமையின் பாடல்
தன்னை மறக்க அல்ல.
தனக்குள் இருக்கும் காயங்களையும்,
கவலைகளையும் மறக்க.
பல நேரங்களில் உற்ற துணையாக
உடன் இருக்கும் இந்த பாடல்கள்.



*கவிஞர் குணசுந்தரி சிவா, காஞ்சிபுரம்*

# கோடையில் குடிநீர் யுத்தம்

கோடை வெயில் குன்றெங்கும் வாசம்
வாடைக் காற்றும் வற்றிப் போயாச்சு
காடைக் கௌதாரிகள் கண்மாயில் தஞ்சம்
ஓடை நதியும் ஊற்றுநீர் இன்றியே

தண்ணீர் வேண்டும் தாகம் தீர்க்க
கண்ணீர் வடிக்குமா? காட்டாறாய் மழையும்
கிணற்று நீரும் கெண்டைக்கால் அளவில்
குணமும் மாறுது குளமும் குட்டையும்

ஆழ்த்துளை கிணறு ஆரவாரம் அற்று
வீழ்ச்சியை நோக்கி விவசாயம் இன்று
மரத்தின் மரணம் மழைநீர் பொய்த்தது
தரிசாய் பாழாகும் தாய்மண்ணும் கண்முன்

குடிநீர் எடுத்து குதிகாலும் தேய்கிறது
படிப்பறிவு இருந்தும் பகுத்தறிவு ஏது?
நடிப்பான உலகில்  நாட்டின் வாழ்வோ.
குடிக்க மதுபானமும், குடிநீரின்றி வாழ்வும்.



கவிஞர் ஈ. தேவணீதன், பல்லடம்

# விரயமாகும் விடைகள்

சில வினாக்கள்
மிகவும் சிக்கலானவை
சரியா? தவறா? என
தேர்வு செய்வதற்குள்
காலாவதியாகி விடுகின்றன.



கவிஞர் கீர்த்தனா பு, திருப்பூர் மாவட்டம்

# தியானம்



"மனமது செம்மையானால்
மந்திரங்கள் தேவையில்லை"
இது ஆன்றோர் வாக்கு
மனம் போல் மாங்கல்யம் என்று
ஒரு பழமொழியும் உண்டு
கீழான மனிதனையும் மேன்மை அடைய
மௌன ஆயுதம் !
திருடன் ஆன வாலி எப்படி ராமாயணத்தை படைத்தார்?
இடைவிடாத தியானத்தால் பக்தி ஞானத்தால் மட்டுமே
அவரால் எழுத முடிந்தது. ஒரு புத்தகத்தை எடுத்து படித்தோம்
ஆனால் மேலிருந்து கீழேதான் படிக்கிறோம்
கீழிருக்கும் நாம் மேலே வருவதற்கு தான்
நம் அறிவை தெளிவுற செய்யவே!
அக்கால முனிவர்கள் தவசிகள் காட்டிற்குச் சென்று
பலகாலம் தவமிருந்து பல வரங்களை பெற்று
ஞானிகளாக ஆகி மக்களின் மனதில் நீங்காத நினைவுகளாக
மங்காத செல்வங்களாக இன்றும் உலா வந்து கொண்டிருக்கிறார்கள்.
இக்கால மக்களாகிய நாம் தியானம் இருக்கும் இடத்திலேயே
மேற்கொண்டால் இருக்கும் நிலையிலிருந்து மேன்மையாகலாமே!
ஓஷோவின் ஒரு உன்னத வாக்கியம் அதாவது இரும்பையும்
பொன்னாக மாற்றும் சக்தி தியானத்தால் மட்டுமே வருமே!
அதாவது நம் மனம் ஆகிய இரும்பை தியானம் மூலம்
பொன்னாக மாற்றும் சக்தி பெற்று விடலாமே
நம் உடல் ஆரோக்கிய குறைவு ஏற்பட்டாலும்
பலவித பிரச்சனைகளில் இருந்தாலும்
நாம் நம் தியானத்தின் மூலம் சரி செய்து விடலாமே!
அனைவரும் தியானம் பழகி உன்னத நிலையை அடைவோமே,
வாழ்க வளமுடன்!

கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# சுமையே சுகமானது

வாழ்க்கை என்பது
சுமையாகவும் இருக்கிறது
சுகமாகவும் இருக்கிறது
***

ஓ! வாழும் வல்லமையால்
அதுவே சுகமாக மாறுகிறது
***

வாழப் பிறந்து விட்டோம்
வாழ்ந்துதானே ஆகவேண்டும்
சுமக்க வந்து விட்டோம்
சுமந்துதானே தீரவேண்டும்
***

சுமக்கத் துணிந்தவரோ
சுகத்தினை அடைகிறார்
சுமக்க மறுப்பவரோ
சோகத்தையே அனுபவிக்கிறார்
***

உன் கண்ணெதிரே
சுமைகளைச் சுமந்து செல்லும்
எறும்புளை எருதுகளை
ஒட்டகங்களை உற்றுநோக்கு.
***

செம்மனச் செல்வியின் சொற்கேட்டு
மக்களைக் காக்க மண்சுமந்த சிவனையும்.
இருள் நீக்கி ஒளிபடைக்க
சிலுவை சுமந்த இயேசு பிரானையும்.
நன்மைகள் ஏராளம் சுமந்து
நானிலத்தோர்க்கு உபதேசம் புகட்ட வந்த
நபிகள் பெருமானையும் பற்றிச் சிந்தி.
***

இன்றைய சுமைகளோ
நாளைய சுகத்துக்காகவே
***

சுமக்கப் பிறந்தவரோ
வாழப் பிறந்தவராகின்றார்
சுமக்க மறுப்பவரோ
மாளப் பிறந்தவராகின்றார்
இறக்கும் வரைக்கும் இதனை மறக்காதே.

ஆம்! சுமந்துபார் - சுகம் மட்டுமல்லவே
சொர்க்கமும் உனக்குத் தெரியுமே!



கவிஞர் விவேகவெளி தமிழேந்திரன், கிழக்கு மாகாணம்

# மாலவனும் வைணவமும் பகுதி 28

## பெரியாழ்வார் தொடர்ச்சி 11

மாலவன்பால் ஆழ்பக்தி! வைணவத்தில் ஈடுபாடு!
கண்ணனவன் மணிவண்ணன் தன்னவனை மதலையாய்ப்
பிள்ளைத்தமிழ் பாவடித்தார் பெரியாழ்வார் தீந்தமிழில்!
பருவங்கள் பதினெட்டு வகைப்பாடு கண்டாரே!
தாலாட்டும் அம்புலியும் செங்கீரை சப்பாணி
தளர்நடையும் அச்சோவும் புறம்புல்கல் பூச்சிகாட்டல்
பாலூட்டல் காதுகுத்தல் நீராட்டல் குழல்வாரக்
காக்கையை அழைத்திடுதல் மேய்த்திடவே கோல்கொணர
வேண்டுவது பூச்சூடல் காப்பிடுதல் பாலபருவ
கிரீடைகள் அயலகத்தார் யசோதைபால் முறையீடு
கண்ணனுக்குப் பால்தராதே என்றுரைத்தல் என்பதுவாய்
பதினெட்டும் நூற்றறுபதின் மேற்பட்ட பாசுரங்கள்
வட்டித்த முன்னோடி அன்னவரே! யாப்பியலார்
பிள்ளைத்தமிழ் ஆண்பாலாய் பெண்பாலாய் பத்துபருவம்
வரையறுத்தார்! முன்னேழும் பொதுவாக்கி பின்மூன்று
ஆடவர்க்கு சிற்றில்லும் சிறுபறையும் சிறுதேராய்
மாதரார்க்கு சிற்றில்லைச் சிதைத்திடுதல் சிறுசோறு
ஆக்கிடுதல் குடிமகனூர் காமவேள்தன் நோன்பெனவே
வகைப்பாடு கண்டார்கள்! பொதுயேழு: காப்பதுவும்
செங்கீரை தால்முத்தம் சப்பாணி மற்றுமமை
வருகையும் அம்புலியும் என்றமைத்தார்! புறத்திணையில்
பாடாண்பேர் திணைவகையே! பருவங்கள் பத்தினிலே
ஒவ்வொன்றும் பத்துபாடல்! நூற்றோடு காப்பொன்றும்
கொண்டதுவே! ஆண்டாள்மேல் பிள்ளைத்தமிழ் பருவங்கள்
பதினொன்று! சிவகாமி அம்மைமேல் பிள்ளைத்தமிழ்
பனிரெண்டு பருவங்கள்! பிள்ளைத்தமிழ் நூற்றொகைகள்
பருவங்களின் மேல்விளக்கம் பின்தொடர்ந்து அமைவனவே!
பெரியாழ்வார் தொடர்ச்சியது மேலுமுண்டு! கோதையொடு
தொண்டரடி பாணாழ்வார் மூவருளர்! சர்க்கரையின்
பந்தரின்மேல் தேன்மாரி சுவைப்பாவால் மகிழ்வோமே!



*கவிஞர் கணக்காயர் (இ.சே.இராமன்)*

# குழந்தை மனம் எப்போதும் அளப்பரியது

நடமாடும் சாலையில்
மனிதன் கவனிக்க மறந்தவை ஏராளம்.
எத்தனையோ சிந்தனைகள்
நாளைய விடியல்
நடந்து முடிந்தவை
என்ன நடக்குமோ என்ற பயம் - இப்படி
சிந்தனை சிதறிப்போகின்றது.



குழந்தை மனம்
கள்ளமில்லாச் சிரிப்பு
வஞ்சகமில்லா நெஞ்சம்.
தந்திரம் தெரியா
வஞ்சகம் அறியா
பொய்கள் கலப்படமில்லா பேச்சு.

கண்ணில்படுபவை எல்லாம் ரசித்து
வடிவங்களை கொஞ்சம் புசித்து
வர்ணங்களை நேசித்து
இயற்கையில் வியந்து
அன்பினில் உறைந்து
அழகுக்கே அழகு சேர்ப்பவை
குழந்தை மனம்.

வயதான பாட்டிக்கு ஒரு முத்தம்,
பாதையோர நாய்க் குட்டிக்கு ஒரு கொஞ்சல்,
யாசிக்கும் விரல்களுக்கு ஒரு வருடல்
பசித்திருப்போருக்கு ஒரு கவலம்
பேதங்கள் இன்றிய புன்னகை
வேற்றுமையில்லா அன்பு.
கெஞ்சலோடு அடம்பிடிப்பும்
கொள்ளை கொள்ளும் குட்டி நடிப்பும்
குழந்தைகளுக்கே உரித்துடையன.

பிரச்சினைகள் கொட்டிக்கிடந்தாலும்
தீராத நோயானாலும்
ஆறாத வடுவானாலும்
ஆயுளே மறுநொடி முடிவடையப்போகினும்
ஒரு நாழிகை ஒற்றைப் புன்னகை
எல்லாமே மாயையாக்கிடும்
மந்திரம் கொண்டவை.

கவிஞர் சிரோஸி அஸானா அக்பர், அநுராதபுரம்

# ஆதியின் துளிரில்

தூறல் மழை நிலம் நனைக்க
ஸ்பரிசம் கதைக்குதோ
மண்ணோடு மறைந்தே
மெய்யோடு மண் பூசியே
நுதலோடு முத்தமிடும்
திவலைத் துளியில் கரைந்தே



அங்கம் கூசும்
சின்ன சின்ன செடியில் மலர்ந்த
பூவையில் பாவை சிலிர்க்க
மழலை போல
அங்கும் இங்குமாய் துள்ளியோடி
முகில் பார்த்தே விழி நாண
இமையோடு பதுங்குதோ

குறுநகையில் வான் பார்க்க
இதழ் நனைத்த துளியும்
நாவோடு ருசிக்க
ரிங்காரமிடும் வண்டுகளின் கூட்டமும்
சிட்டுக்களின் கூச்சலும்
மேனி நனைத்த திவலையில்

பரிசுத்த பாவையானாளோ?
கருமுகிலிடை பரிதி உதிக்க
வானவில்லின் ஏழு நிறங்களில் பிரகாசிக்க.

மால்வரை நெற்றியில் இயற்கை
அன்னையின் மடி தவழ
மெய் அவனியில் கற்சிலையாய்
அவள் உயிர் பறந்தனவாம்
விண்ணோடு.

கனா குறுக்கே
கரம் நீட்ட
நிதர்சனம் உணர்ந்தே
திழைத்தாளாம் ஆதியின் துளிரில்

*கவிஞர் சீ. கார்த்திகா, பழநி*

# தாலாட்டு பாடல்

ராரி...ராரி... ராரி...ராரி.... ஆராரோ
ராரி... ராரி... ராரி... ராரி

வையை ஆத்தங் கரையிலே
வம்சம் வளரப் பொறந்தவரே
வந்த நேரம் நல்ல நேரம்
வன்னிமரம் தழைச்ச நேரம் ( ராரி...



குன்னூர் மண்ணுல
குலங் காக்கப் பொறந்தவரே
குவலயங் காக்கவே
குஞ்சரம் ஏறி வந்தவரே (ராரி...

தெக்கத்திச் சீமையிலே
தெசை காக்கப் பொறந்தவரே
தெவிட்டாத தெள்ளமுதே
தெம்முனை சிதைத்த பரியே (ராரி...

சுப்பையா குடும்பத்துல
சூரப் புலியா பொறந்தவரே
சுந்தரரு என் ஐயாவை
சொந்தம் எல்லாம் வாழ்த்துவாங்களே ( ராரி...

கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜ், பட்டாபிராம், சென்னை

மழையோய்ந்த குளத்தில்
இரை தேடும் தாமரைக்கோழி
சிறகுலிருந்து இறங்கும் குஞ்சுகள்

அமாவாசை இரவு
உயிர் ஒளிர்வு உப்பங்கழியில்
பொழியும் மழைத்துளிகள்



கவிஞர் ஸ்ரீவி. முத்துவேல், துபாய்

# முரண்பாடு



கருத்துக்களின் மாறுபாடு
கருதுவதில் வேறுபாடு.

கடைசியில் நிகழ்வதோ
கலவர முரண்பாடு.

வார்த்தைகளின் பயன்பாடு
நாவிற்கில்லை கட்டுப்பாடு.

வார்த்தையை சிந்திவிட்டால்
அள்ளுவதோ மிச்சப்பாடு.

மனிதரில் பாகுபாடு
ஒழிப்பதோ பெரும்பாடு.

இனமத சண்டைகளுக்கு
இல்லையிங்கு தட்டுப்பாடு.

நாடுகளின் முறண்பாடு
ஆயுதங்கள் பயன்பாடு.

பகுத்தறியும் மனிதர்களின்
கருத்துக்கு கட்டுப்பாடு.

மனிதபிமானம் குறைபாடு
பாரெல்லாம் சுடுகாடு.

இறுதியில் கிடைப்பதோ
சிதைந்துபோன இடிபாடு.

கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# அனுபவம்

முகம் மலரும்
விழுங்குதல்களின்
நடுவே
கசாயத்தை ஏற்கும்
தொண்டை குழி
போல



பாதுகாப்பு கருதி
செருப்பு கடிக்கு
பழகுகின்றன
கால்கள்

அதோ தூரத்தில்
தன் கோபம் தணிய
மரங்கள் வளர்த்து
விவசாயம்
செய்து கொண்டிருக்கிறது
சூரியன்

சுவாரசியங்கள்
குறைந்த
நன்மைகளை
தொடுவது என்பது

ஒவ்வொரு நாளும்
அளவுகோல்கள் அற்று
தாகம் எடுத்து
தண்ணீர் குடிப்பது
போன்றதாகும்

வாழ்வியலின்
பக்கங்களில்
அறவாழ்வு மட்டுமே
சிறந்த
அனுபவம் ஆகிறது

கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# அம்மாவின் புடவை

அம்மா புடவையின் ஒவ்வொரு இழையிலும்
காலத்தை வென்ற கதைபலவும் ஒளிந்திருக்கும்!
வளர்ந்த பின்னாலும் நெஞ்சத்தில் நிச்சயம்
மலரும் நினைவுகளாய் எந்நாளும் மணம்வீசும்!
அன்னையின் வாசத்தை அறிந்திடும் குழந்தைக்கு
பந்தத்தை உருவாக்கும் மென்மையான தொடுதல்கள்!
குழந்தை அழுகின்ற காரணத்தை அறிந்து
இழையோடும் பாசத்தால் பசிதீர்க்கும் வேளைகளில்
முழுவதுமாய் மூடிடுவாள் புடவைத் தலைப்பாலே!
வீட்டினுள்ளும், வயல்வெளிகளில் வேலை செய்கையிலே
கட்டிவைத்துத் தாலாட்டி கண்வளரச் செய்வதற்கும்
புடவையே தூளியாய் புதுவடிவம் கொண்டிடுமே!
மடிமீது படுத்துறங்கும் வேளைகளில், தலைப்பால்
மூடிமறைத்து ஈக்கள் மொய்க்காமல் காத்திடுவாள்!
கோடை வெப்பமோ குளிர்மழைக் காலமோ
படுத்துறங்க பாய்விரிப்பாய்! வியர்வை பெருகுகையில்,
அடம்பிடித்து அழுகின்ற வேளைகளில் கண்ணீரைத்
துடைத்துவிடும் துவாலையாய் மாறுவதும் அம்மாவின்
புடவை! அப்பா மிரட்டிடும் வேளைகளில்
ஓடிப்புகும் புகலிடமும் அம்மாவின் புடவைதானே!
புகையும் அடுப்பாலும், மனத் துன்பத்தால்
பொங்கிவரும் கண்ணீரைத் துடைத்திடவும் புடவை!
நாணம்மிகும் வேளைகளில் முகம் மறைத்து
நகைப்பதை மறைப்பதும் புடவைத் தலைப்பாலே!
இன்ப துன்பங்கள் தாங்கிநின்ற வலிமையின்
சின்னமாகத் திகழ்ந்திடும் அம்மாவின் புடவை!
பின்னாளில் தாயவள் மறைந்த பின்னாலும்
கண்ணுறும் போதெல்லாம் கண்ணீர் பெருக்கெடுக்க
அன்னையின் பந்தத்தை எந்நாளும் நம்முள்ளே
உணரவைத்து உயிர்ப்பிக்கும் அம்மாவின் புடவை!



*கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி*

# தமிழ்ச் சிறுகதைச் சிற்பிகள்

## புத்தக வாசிப்பு — கட்டுரைத் தொகுப்பு




பேராசிரியர் பெ விஜயகுமார்
முதல் பதிப்பு ஜூலை 2022

பக்கம் 128 ; விலை ரூ 120
வெளியீடு பட்டறிவுப் பதிப்பகம் மதுரை
தொடர்புக்கு 9500740687

மதுரை சரஸ்வதி நாராயணன் கல்லூரி ஆங்கிலத்துறையில் 36 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றவர்; புதிய ஆசிரியன் மாத இதழின் இணை ஆசிரியராக பணிபுரிபவர்; சிறுகதைகள் பற்றியும் சிறுகதை எழுத்தாளர்கள் பற்றியும் நிறைய ஆய்வுத் தொகுப்புகளும் கட்டுரைகளும் வெளியிட்டவர் என பன்முக தளங்களில் இயங்கும் பேராசிரியர் பெ விஜயகுமார் அவர்கள் தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்களில் சிறந்த 20 பேர்கள் பற்றிய அறிமுகமும் அவர்கள் எழுதிய சிறந்த சிறுகதைகள் சுருக்கமும் கொண்டு தொகுத்திருக்கும் நூல் இது.

இலக்கியத்தின் பிற வகைகளை விட சிறுகதை என்பது வாசிப்போரின் மனதில் உடனடியாக சிந்தனையை எழுப்பி முழுமையான இலக்கை அடைவதில் வெற்றி அடைகிறது. உலகின் தலைசிறந்த சிறுகதை எழுத்தாளர்களுக்கு இணையாக பல்வேறு கதைக்கலன்களை அடிப்படையாகக் கொண்டு தங்கள் வாழ்ந்த சூழலிலும் தங்களின் வாழ்க்கை நெறிமுறைகளையும் அடிப்படையாகக் கொண்டும் தாங்கள் அனுபவித்த வாழ்க்கை நிலையைக் கொண்டும் சிறுகதை எழுதியிருக்கும் எழுத்தாளர்களைப் பற்றிய சிறப்பான அறிமுகமும் அவர்கள் எழுதிய சிறுகதைகளில் சிறந்த நான்கு அல்லது ஐந்து சிறுகதைகளை பற்றிய சுருக்கமும் இந்நூலில் எழுதப்பட்டுள்ளன. மற்ற நூல்களின் மதிப்புரையைக் காட்டிலும் இந்த நூலின் அறிமுகம் என்பது தனி சிறப்பு வாய்ந்தது.

இதில் இடம் பெற்றுள்ள 20 சிறுகதை எழுத்தாளர்களும் வாழ்ந்த காலகட்டங்கள் வெவ்வேறானவை. சிலர் மறைந்து போனவர்கள் சிலர் இன்றும் எழுதிக் கொண்டிருப்பவர்கள் ஆனாலும் ஒவ்வொரு சிறுகதை எழுத்தாளர்களின் மன உணர்வுகள் அவர்களின் கதைகளில் எவ்வாறு வெளிப்படுகிறது என்பதை மிகச் சிறப்பான ஆய்வுடன் எழுதி இருக்கிறார் நூலாசிரியர்.

கவிஞர் திரு. இளையவன் சிவா

காந்தியத்தின் மீதும் காந்தியின் கொள்கைகளின் மீதும் மிகுந்த ஈடுபாடு கொண்டு தனது எழுத்துலகையும் அவ்வாறே அமைத்துக் கொண்ட அசோகமித்திரன் பற்றிய அறிமுகம் மிகச் சிறப்பானது. அமெரிக்க இலக்கியங்களை தமிழுக்கு அறிமுகப்படுத்திய பெருமைக்குரியவர் அசோகமித்திரன்.

எப்போதும் இழந்தவர்கள் பக்கமாக நின்று பேசுகிற கதைகளை எழுதுபவராக திகழும் அழகிய பெரியவனின் கதைகளில் மனிதர்கள் படும் பாடுகளை மனம் கசியும் விதத்தில் சொல்வதோடு நின்று விடாமல் வாசகர்களை ஏன் என்று கேட்பவர்களாகவும் தவறுகளை மறுப்பவர்களாகவும் மாற்றி அமைக்கும் திறமையும் தனது கதைகளுக்குள் வைத்திருக்கும் அழகிய பெரியவன் பற்றிய கட்டுரையும் சிறப்பானது.

திருவனந்தபுரத்தில் பத்மநாபசுவாமி கோயிலின் எதிரே உள்ள சாலைக்கம்போளம் என்னும் கடைத்தெருவை தனது படைப்புகளில் வெகுவாக எழுதி அழியாத கோலமாக மாற்றிக் காட்டியவர் மாதவன். இவருடைய கதாபாத்திரங்கள் பெரும்பாலும் வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கும் விளிம்பு நிலை மனிதர்களாக உலவுகிறார்கள். எதிர்காலத்தைப் பற்றிய எந்தக் கனவும் காணாமலும் அன்றைய பொழுதை அப்படியே கழிக்கும் சாதாரண மனிதர்களையும் தனது கதைக்களத்தில் நமக்கு காட்சிப்படுத்துகிறார் ஆ மாதவன்.

தமிழ் சிறுகதை உலகில் கம்பீரமாய் வலம் வந்த ஜெயகாந்தன் முறையான கல்வி பெரும் வாய்ப்புகள் அற்று சிறுவயதிலேயே இடதுசாரி இயக்கத்தில் இணைந்து போராளியாக வாழ கற்றுக் கொண்டவர். இவருடைய கதைகள் அன்றைய காலகட்டத்திலேயே பொதுவெளியில் நிறைய அதிர்வலைகளை ஏற்படுத்தியதை நாம் அறிய முடிகிறது. முற்போக்கு எண்ணங்களும் பெண்கள் மீதான அடிமைத்தனத்தை கேள்வி கேட்கும் வீரமும் விவேகமும் நிறைந்த எழுத்துகளால் நம்மைக் கட்டிப் போட்டவர் ஜெயகாந்தன்.

தமிழில் இஸ்லாமியப் பெண்களின் வாழ்வியல் அனுபவங்களை ஆணாதிக்கம் கோலோச்சும் அனைத்து இந்திய சமூகங்களிலும் பெண்கள் சுதந்திரங்கள் எதுவும் இன்றி இறுக்கமான சூழலில் வாழும் அவலத்தை இஸ்லாமிய பெண்களின் இருண்மையான பக்கங்களை தனது எழுத்துக்களின் வழியாக உலகறியச் செய்தவர் கவிஞர் சல்மா.

கவிஞர் திரு. இளையவன் சிவா

தனது படைப்பும் செயல்பாடும் சமூக அக்கறை சார்ந்திருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்து கொண்டு கதை உலகின் காலடி படாத கிராமத்தின் ஒடுக்கப்பட்ட மக்களையும் அவர்களின் பாடுகளையும் தனது கதைகளின் வழியாக மனிதர்களின் துயரற்ற சொற்களால் எழுதி இருக்கும் பா செயப்பிரகாசம் அவர்களின் கதைகள் இந்தியாவின் சாதிய கட்டுமானத்தை கேள்வி கேட்கிறது.

படைப்பாளியும் வாசகனும் ஒன்று சேரும் புள்ளிதான் படைப்பின் வெற்றி என்ற நம்பிக்கையில் தனது படைப்புகளின் பெரும்பாலான முடிவுகளை வாசகர்களின் மனதிற்குள்ளேயே விட்டுவிடுவதே லா.ச. ராமாமிர்தம் அவர்களின் சிறுகதைகளின் இலக்கணமாகத் திகழ்கிறது.

சிறுகதை நாவல் கடிதங்கள் நாட்டுப்புற பாடல்கள் வரலாறு வட்டாரச் சொல் அகராதி கதை சொல்லி என்று தமிழின் அனைத்து இலக்கிய வகைகளிலும் தனது கை வண்ணத்தைப் பதித்தவர். மழைக்குப் பள்ளிக்கூடம் ஒதுங்கிய போதும் மழையை ரசித்ததில் பள்ளியை பார்க்க மறந்து தனது எழுத்துக்களால் மிகப் பெரும் உயரத்திற்கு சென்ற கி ராஜநாராயணன் தமிழ் இலக்கியத்திற்கு செய்த தொண்டு மிகப்பெரியது. சாதியையும் அதன் கொடூர வடிவமான தீண்டாமையையும் விளிம்பு நிலை மனிதர்கள் அன்றாடம் சந்திக்கும் அவலத்தையும் அவமரியாதையையும் கி.ரா வின் கதைகள் வழியே நாம் உணர முடிகிறது.


நாளை என்ன நடக்கும் என்பது தெரியாது தன்னுடைய ஒவ்வொரு நாளையும் துயரத்துடனேயே கடந்துள்ளார்;மனநோய் பற்றிய சிகிச்சையை நன்கு கற்று அறிந்த அவரே மன நோய்க்கு ஆளாகி மருந்துகளுடனே தனது வாழ்வை கழித்தவர் கோபி கிருஷ்ணன்.சாதாரண மனிதர்களின் அலுப்பு மிகு வாழ்வை நகைச்சுவையோடு சித்தரிக்கும் கோபி கிருஷ்ணன் தனக்கான மனநோய் பற்றியும் அதன் மீதான பயத்துடனேயும் வாழ்வை கழித்திருக்கிறார்.

சிறுகதை, குழந்தை இலக்கியம், புதினம், கட்டுரைத் தொகுப்பு,உலக சினிமா, மொழிபெயர்ப்பு நூல்கள், கவிதைகள் தொடர்பான கட்டுரைகள் என இலக்கியத் துறையின் அனைத்து வகைமைகளிலும் தனது காலடியைப் பதித்து இன்று பதிப்பகமும் வைத்து நிறைய நூல்களை வெளியிடும் எஸ் ராமகிருஷ்ணன் அவர்கள் பற்றிய அறிமுகம் நூலில் மிகச் சிறப்பான கட்டுரையாக மிளிர்கிறது.

கவிஞர் திரு. இளையவன் சிவா

# இது பெரியவங்க உலகம்

## புத்தக வாசிப்பு




ஆசிரியர் : திரு. அனில் பாக்சி
தமிழில் : திரு. ஜி. எஸ். எஸ்
விகடன் பிரசுரம் (451) செப்டம்பர் 2009.

குறைவான இதயத் துடிப்புடைய விலங்குகள் அதிக காலம் வாழ்கின்றன. அவற்றின் உடல் செயல்பாடுகளுக்கு பிற விலங்குகளை காட்டிலும் குறைவான சக்தியே தேவை. விளையாட்டு வீரர்களின் இதயத்துடிப்பு, அவர்கள் விளையாடாத நேரத்தில் மிக குறைவாகவே இருக்கும் உடலின் இயல்பான சக்தி அதிகமாக இருக்கும். ஆனால் இதில் பல மாறுபாடுகள் இருக்கவே செய்கின்றது.

பறவைகள் தங்கள் உடல் வெப்பத்தை பராமரிப்பதற்காக தங்களுடன் தங்கள் சக்தியில் பெரும் பகுதியை செலவிடுகின்றன

உண்மையில் ஆதி மனிதன் சராசரி வயது 20 வயது வரை மட்டுமே பெரும்பாலும் வாழ்ந்தனர். அந்த காலத்தில் நோய்களுக்கு எதிராக அறிவியல் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் இல்லாமையால் நோய்வாய்ப்பட்டு இறந்தனர்

ஏனெனில் பறவைகளைப் போல அவர்களால் நோய்களிலிருந்து தங்களை காத்துக் கொள்ளும் அறிவு இல்லாமையும் பலவீனமான உடலும் தான் அதற்கு காரணம். ஆகவே அவர்களின் சராசரி ஆயுட்காலம் குறைந்தாலும் அவர்களின் உடல் சக்தி குறையாது. இப்போது இருக்கும் சமுதாயம் உருவாவதற்கு முன் போதுமான உணவு இல்லாததால் இருந்தனர்.

உயிர் வாழ்தல் தேவைதான் ஆனால் அது மட்டுமே போதாது.இருந்தது போல இல்லை வித்தியாசமாக அமைந்திருந்தது. பூமியில் இருந்து நுண்ணிய கிருமிகள் ஆக்சிஜன் இல்லாமலேயே பழகிப் பெருகி மகிழ்ச்சியாக இருந்தன. அதற்கு உதாரணமாக சொல்ல வேண்டுமானால் ஆழ்கடலில் சல்பர் பாறை இடுக்குகளில் உயிரினங்கள் துளி கூட ஆக்ஸிஜன் இல்லாமல் வாழ்ந்து வருகின்றன. கொஞ்ச காலம் கழித்து அதாவது 200 கோடி ஆண்டுகளுக்குப் பிறகு பூமியின் வளிமண்டலத்தில் மாற்றம் ஏற்பட துவங்கியது.

*கவிஞர் திரு. இரா. மதிராஜ்*

## புத்தக வாசிப்பு

அதற்குப் பிறகு 100 கோடி ஆண்டுகளுக்கு பிறகு தான் இப்போதைய வளிமண்டலம் அதாவது ஐந்தில் ஒரு பங்கு ஆஜி என்னோடு உருவானது. இந்த மாற்றத்துக்கு காரணம் நுண்ணுயிரிகள் தான் என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு உண்மை.

1965 லிருந்து வெளிநாட்டிலிருந்து வருவதற்கான கொள்கைகளுக்கும் அளவிற்கு அமெரிக்காவுக்கு தொலைநோக்கு பார்வை இருந்தது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அமெரிக்கா அதிக வலிமை அடைந்தது. அந்த நூற்றாண்டு நினைப்பதில் இது தெளிவாக தெரிய தொடங்கியது. 60 களில் கறுப்பர்களுக்கும் சம உரிமை அளித்தது. உலகின் பல பகுதியில் இருந்தும் திட்டமிட்ட குடியேற்றங்கள்

அமெரிக்காவில் நடைபெற தொடங்கின. தனது முதன்மை நிலையைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டுமென்றால், உலகத்தின் பல பகுதியை சேர்ந்தவர்களுக்கும் தனது எல்லைக்குள் நுழைய அனுமதிக்க வேண்டும் என்பதை அமெரிக்கா புரிந்துக் கொள்ள வேண்டியது என்பது இப்படி ஒருவர்கள் பெரிய குடும்பத்தை ஆதரிப்பது போன்று தங்கள் கலாச்சாரத்தையும் சுமந்து வந்தனர். தவிர எப்போதுமே பிற நாடுகளை சேர்ந்த விஞ்ஞானிகள் பொருளியல் நிபுணர்கள் போன்ற மேதைகளை அமெரிக்க அனுமதித்து வந்தது.

முக்கியமாக சமீப தொழில்நுட்பங்களை அறிந்த மேதைகளுக்கு தன் கதவுகளை வெளியே திறந்து வைத்தது. உலகமயமாக்களுக்கு பிறகு ஒரே உலகம் தோன்றத்தான் செய்யும் என்கின்றனர் பல சிந்தனையாளர்கள் பல்வேறு சமூகத்துக்கு இடையே நிலவும் வேறுபாடுகள் மெல்ல மெல்ல மறைந்து வருகின்றன.

ஐரோப்பா நீண்ட காலமாக அமெரிக்காவுக்கு போட்டியாக வளர்ந்து வரும் கனவில் உள்ளது. இரண்டு உலகப் போர்களுக்கு பின்னால் ஐரோப்பா அமெரிக்காவின் எழுச்சியை கண்டது. அதேபோல ஐரோப்பா உலக அரங்கில் சுருங்கி போனது உணர்ந்து கொண்டது. ஐரோப்பியர்களின் நோக்கம் அமெரிக்காவுக்கு இணையாக வளர்வது தான். அல்லது அதை பின்னுக்கு தள்ளுவது இரண்டாம் உலகப்போருக்கு பின்னால் இந்த கருத்து பிரான்ஸ் மற்றும் ஜெர்மனியில் முளைவிட்டது. இரண்டு நாடுகளும் தங்கள் ஐரோப்பாவின் தாயகம் என்று நினைத்துக் கொள்கின்றன.

*கவிஞர் திரு. இரா. மதிராஜ்*

## புத்தக வாசிப்பு

அது மட்டுமில்லாமல் உலகில் ஏற்படும் நவீன வளர்ச்சிக்கு எல்லாம் தாய் என்று கருதுகின்றன. ஆனால் அனைத்து விஷயங்களும் அவர்கள் நினைக்கிற வழியில் செல்லவில்லை. எடுத்துக்காட்டாக, 2050 ஆம் ஆண்டில் ஐரோப்பிய கூட்டமைப்பை கூட்டும் பொருளாதார குறைவாகவே வளரும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

மக்கள் தொகையைப் பொறுத்தவரையில் 1950 முதல் 2050 வரை ஐரோப்பிய மக்கள் தொகையில் கிட்டத்தட்ட எவ்வித மாற்றமும் இல்லை.ஆகவே, மக்கள் தொகை பிரமிடு தலைகீழாக தலைகீழாக மாறிவிடும்.அமெரிக்கா தன்னுடைய மக்கள் தொகையின் பலத்தை தாழ்த்திக் கொள்ளவில்லை. மற்ற வளர்ச்சி அடைந்த நாடுகளைப் போல் அல்லாமல் அதன் மக்கள் தொகை இளமையாகவே உள்ளது.இன்னும் சொல்லப்போனால் அனைத்து வளர்ந்த நாடுகளை விட மிக மிக இளமையாக இருக்கிறது. உண்மையான பிரச்சினை அதிகாரப் போட்டியில் தான் வருகிறது.

ஐரோப்பிய கூட்டமைப்பு தன்னைப் பற்றி யோசிக்கும் போது அதன் ரேடார் பார்வையில் ஏழை நாடுகள் படுவதில்லை அதே நேரத்தில் ஐரோப்பா மற்றும் அமெரிக்கா என்று யோசித்து யோசிக்கிறது அந்த நிலையில் தற்போது மாறிவிட்டது.இரண்டாவது உலகப் போருக்கு பின்னால் மிகப்பெரிய இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை. ஆனாலும் புதிய நாடான இஸ்ரேலை உருவாக்க உதவியது.இது மிகப்பெரிய பிரச்சனையை சந்திக்கவில்லை. சூடான் மற்றும் பிரான்ஸ் இணைந்து சூயஸ் கால்வாய் தேசியமயமாக ராணுவ நடவடிக்கையில் இறங்கின.

இன்னும் பல அறியாத தகவல் கொண்ட அற்புத ஆராய்ச்சி நூல் தான் இது. அனைவரும் அவசியம் படிக்க வேண்டிய நூல்.

*கவிஞர் திரு. இரா. மதிராஜ்*

# ஆகாயத்தில்

## சிறு நவீனம்

அத்தியாயம்-(2a)



டாக்டரின் இளைய மகள் சில்வியா கண்கள் சிவக்க "அப்பாவின் நிலைமை இப்படியாகி விட்டதே. அப்பாவிடம் என்னவெல்லாம் சொல்ல நினைத்திருந்தோம்' என்று எண்ணிக் கொண்டே திரும்பிப் பார்த்த போது சகாயராஜ் கீழேயிருந்து வேகமாக மாடியேறி வந்துக்கொண்டடிருப்பதை கவனித்தவள் கொஞ்சம் பதட்டமானாள்.

'இவன் ஏன் இங்கு வந்தான். அப்பா மருத்துவமனையில் சேர்க்கப் பட்டதை நான் இவனிடம் சொல்லவில்லையே.? ஏற்கனவே ஒருமுறை வீட்டிற்கு வந்து அப்பாவிடம் வாங்கிக் கட்டிக் கொண்டு போனது காணாதா. ஏன் இங்கு வந்தான்? அவருக்குத் தெரிந்தால் கடித்துக்குதறி விடுவார்கள் பேசாமல் போகச் சொல்லி விடலாம்' என்று எண்ணியவாறு படிக்கட்டின் அருகில் வந்தவள் சகாயராஜ் மேலேறி வந்ததும், அவனைத் தனியாக இழுத்துக்கொண்டு ஒரு ஒதுக்குப் புறமாக வந்தாள்

"இங்கே ஏன் வந்தாய்?"

"என் வருங்கால மாமனாரைப் பார்த்துவிட்டு வரலாமென்று தான்"

"மண்ணாங்கட்டி ஏற்கனவே நம்ம செட்டப் படி நீ எங்க வீட்டிற்கு வந்தாய்.. அப்பா உன்னை செமையாகத் திட்டி அனுப்பிட்டாங்க இந்த நேரத்திலே நீ அந்தப் பக்கம் வந்தே என் அம்மா,அக்கா,தம்பி எல்லோரும் உனக்கு சரியான டோஸ் கொடுத்து விடுவார்கள்."

அதற்குத்தான் முன் யோசனையோடு உன் அப்பாவிற்கு உதவி செய்ய நானும் அமெரிக்காப் போகிறேன் நான் செய்கிற உதவியிலேயே மயங்கிப் போய் அப்படியே என்னை மாப்பிள்ளையாக ஏற்றுக் கொள்வார்கள்."


"சும்மாயிரு! இந்த ஊரிலே ஒழுங்காக ஒரு வேலைக்குப் போக துப்பில்லை, அமெரிக்கா போகப்போகிறாராம். அதெற்கெல்லாம் உனக்கு காசு ஏது ராஜா?"

அவன் அவளிடம் ஏதோ இரகசியமாய் சொல்ல, அப்படியே ஒரு நிமிடம் ஸ்தம்பித்துப் போனவள் "ராஜ் உன்னைக் காதலித்ததே தப்போ என்று தோன்றுகிறது.

கவிஞர் திரு இராஜகைநிலவன்

என் அப்பா பெரிய டாக்டர், எஞ்சினியர், கலெக்டர்னு மாப்பிள்ளை பார்த்துக்கொண்டிருக்கிறார்.

நீ அவரோடு அமெரிக்க ஆஸ்பத்திரியில் இருந்து நர்ஸிங் பாயாக உதவி செய்தால், கூட கொஞ்சம் சீப்பாகி விடுவாய். வேறு ஏதாவது நல்ல வேலைக்கு போக முயற்சி செய்″ என்றாள் சில்வியா.




...தொடரும்

கவிஞர் திரு இரஜகைநிலவன்

# வ.வே. சுப்பிரமணியம்

02 ஏப்ரல் 1881-04 ஜூன் 1925

கட்டுரை



வரகனேரி வேங்கடேச சுப்பிரமணிய ஐயர், இந்திய விடுதலைக்காக முதன்மை பங்காற்றியவரும், சிறந்த இலக்கிய வாதியும், மொழி பெயர்ப்பாளரும் ஆவார். வ.வே.சு. கம்பீரமான தோற்றம் உடையவர். மார்பை எட்டிப் பார்க்கும் கறுப்பு தாடி; செருகிக் கட்டப்பட்ட முரட்டுக் கதர்; மேலே உடம்பு முழுவதும் போர்த்தப்பட்ட ஓர் ஆடை; நெற்றியில் பிறைசந்திரக்குறி; நடப்பதற்கும் நடை என்று பெயர், ஒழுக்கத்திற்கும் தமிழில் நடையென்று பெயர்; இரண்டிலும் சாலச் சிறந்தவர் வ.வே.சு. தமிழ் இலக்கிய பங்களிப்புகளுக்காக இவர் 'தமிழ்ச் சிறுகதை தந்தை' என்றும் அழைக்கப்படுகிறார்.

## பிறப்பு - கல்வி

வேங்கடேச ஐயர் -காமாட்சியம்மாளுக்கு 02.04.1881ல் பிறந்தார்.

வ.வே.சுப்பிரமணியம் திருச்சி செயிண்ட் ஜோசப் கல்லூரியில் கல்வி பயின்றார். தம் பன்னிரண்டாம் வயதில் அக்கால மரபையொட்டி அவ்வயதிலேயே அத்தை மகள் பாக்கியலட்சுமி அம்மையாரைத் திருமணம் செய்து கொண்டார். பதினாறாம் வயதில் பி.ஏ. பட்டத் தேர்வில் மாகாணத்தில் முதலாவதாகத் தேறினார். பின்னர் சென்னை சென்று வக்கீல் பரீட்சையில் முதல் பிரிவில் தேறி, சென்னை மாநகர் ஜில்லா கோர்ட்டில் முதல் வகுப்பு ப்ளீடராகச் சேர்ந்து வக்கீல் தொழில் நடத்தினார்.

கிரேக்கம், இலத்தீன், பிரெஞ்சு, ஆங்கிலம், சமஸ்கிருத, தமிழ் மொழிகளில் ஆழ்ந்த புலமை பெற்றவராய் விளங்கினார்.

## இலண்டனில் அரசியல் போராட்டம்

1907- லண்டன் சென்று பாரிஸ்டர் பட்டம் பெற வந்த வ.வே.சு. வை சுதந்திர வீரராக்கியது இந்தியா ஹவுஸ். அங்கு அடிக்கடி சென்றபோது தீவிர தேசிய இயக்கவாதியான வீர சாவர்க்கர் போன்ற புரட்சி வீரர்களின் தொடர்பு அவருக்குக் கிடைத்தது. பாரிஸ்டர் படிப்பு அவருக்கு இரண்டாவது பட்சமாகியது.

திரு அ வில்சன் இதழாசிரியர்

# வ.வே. சுப்பிரமணியம்

02 ஏப்ரல் 1881-04 ஜூன் 1925

கட்டுரை

## இலண்டனில் அரசியல் போராட்டம்

பட்டமளிப்பு விழாவில் ராஜவிசுவாசப் பிரமாணம் எடுக்க மறுத்ததால் அவரைக் கைது செய்ய ஆங்கில அரசு ஆணையிட்டது. வினாயக் தாமோதர் சாவர்க்கரை மாறுவேடத்தில் வ.வே.சு. சந்தித்தார். அப்போது சாவர்க்கர் வ.வே.சு. ஐயரை எவ்வாறாயினும் இந்தியா தப்பிச் செல்லக் கூறினார். அவ்வண்ணம் வ.வே.சு. ஐயரும் சீக்கியர் போல் வேடம் பூண்டு பிரான்ஸ் சென்று துருக்கி, கொழும்பு வழியாகப் பயணம் செய்தார். அப்பயணம் வீரதீர சாகசச் செயல்கள் நிறைந்தது. மாறுவேடத்தில் ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் பல பிரிட்டிஷ் உளவாளிகளை வெற்றிகரமாக ஏமாற்றி பயணம் செய்த பின், 1910 அக்டோபர் 9 இல் வ.வே.சு. புதுச்சேரி வந்தார்.

## புதுச்சேரி அரசியல் வாழ்க்கை

மண்டயம் ஸ்ரீநிவாசாச்சாரியார், அரவிந்த கோஷ், மகாகவி பாரதியார், நீலகண்ட பிரம்மச்சாரி, வ. ரா. போன்ற மற்ற வீரர்களோடு இணைந்து இந்திய விடுதலைக்குப் போராடினார். இங்கும் வ.வே.சு. இந்தியா பத்திரிகைக்கு தொடர்ந்து எழுதி வந்தார்.

## அகிம்சாவாதியாதல்



மகாத்மா காந்தியை இரண்டாம் முறை சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டு அதிதீவிரவாதியான வ.வே.சு. தன் கைத்துப்பாக்கியைக் காந்தியிடம் ஒப்படைத்துவிட்டு அஹிம்சாவாதியாக மாறினார்.

தமிழ்த்தென்றல் திரு. வி. கலியாணசுந்தரனார், தேசபக்தன் இதழிலிருந்து விலகவும், 1920-இல் சென்னை சென்று தேசபக்தன் இதழின் ஆசிரியராகச் சிலகாலம் பணியாற்றினார். பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எதிராக பல வீரர்களை உருவாக்கிய கட்டுரைகளை எழுதினார். தேசபக்தனில் அவர் எழுதாத ஓர் எழுச்சிக் கட்டுரையைக் காட்டி, பெல்லாரி சிறைக்கு அனுப்பியது எதேச்சதிகார ஆங்கிலேய அரசு. பின்னர் விடுதலையானார்.

*திரு அ வில்சன் இதழாசிரியர்*

# வ.வே. சுப்பிரமணியம்

02 ஏப்ரல் 1881-04 ஜூன் 1925

கட்டுரை

## தமிழ் குருகுலமும் ஒப்பற்ற பணிகளும்

1922-இல் சேரன் மாதேவியில் தமிழ்க்குருகுலம் என்ற கல்வி நிலையத்தைத் தொடங்கினார். அதை நிர்வகிக்க பரத்வாஜ் ஆசிரமத்தையும் அமைத்தார். 1924-இல் பாலபாரதி என்ற இதழைத் தொடங்கினார்.


## தமிழிலக்கிய பங்களிப்பு

மிகச் சிறந்த சுதந்திரப் போராட்ட வீரராகத் திகழ்ந்ததைப் போலவே வ.வே.சு. இலக்கியப் புலமையிலும் சிறந்து விளங்கினார்.

- திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.
- குளத்தங்கரை அரசமரம்' என்கின்ற பெயரில் சிறுகதையை வெளியிட்டார். இதுவே முதன்முதலில் வெளிவந்த தமிழ் சிறுகதையாகும்.
- இவரது மங்கையர்க்கரசியின் காதல் என்ற புத்தகம் தமிழில் வெளிவந்த முதலாவது சிறுகதைத் தொகுதியாகும்.




- 1921-22 காலப்பகுதியில் பெல்லாரி சிறையில் ஒன்பது திங்கள் சிறைப்பட்ட அவர், கம்பராமாயண ஆராய்ச்சி (KAMBARAMAYANA -A STUDY) எனும் நூலை ஆங்கிலத்தில் எழுதினார்.
- கம்பராமாயணப் பாலகாண்டப் பதப்பிரிப்புப் பதிப்பையும் கொணர்ந்தார்.
- கம்ப நிலையம் என்ற நூல் விற்பனையகத்தைத் தொடங்கி ஏராளமான நூல்களை வெளியிட்டார்.
- பல மொழிபெயர்ப்பு நூல்களை வடித்தார்.
- மாஜினியின் சுயசரிதை, கரிபாலிடியின் வரலாறு, நெப்போலியன், தன்னம்பிக்கை, "கம்பராமாயணம் - ஓர் ஆராய்ச்சி" போன்ற நூல்களை எழுதியுள்ளார்.




- பாரதி எனும் மாபெரும் கவிஞரின் பெருமையை அக்காலத்திலேயே அறிந்து அவரது சமகாலத்திலேயே பதிவுசெய்தார்.

*திரு அ வில்சன் இதழாசிரியர்*

### மறைவு

தம் குருகுல மாணவர்களுடன் 1925 சூன் 3 அன்று அம்பாசமுத்திரம் அருவி காணத் தம் மகள் சுபத்திராவுடன், மகன் கிருஷ்ணமூர்த்தியையும் அழைத்துக் கொண்டு சுற்றுலா சென்றார். 1925 சூன் 4 அன்று அருவியில் விழுந்த மகளைக் காப்பாற்ற குதித்த வ.வே.சு. ஐயர் அங்கேயே உயிரிழந்தார்.

தமிழ்நாடு அரசு வ.வே.சுப்பிரமணியம் நினைவைப் போற்றும் வகையில் திருச்சியில் வரகனேரி, அக்ரஹாரத்தில் உள்ள அவர் வாழ்ந்த இல்லம் வ.வே.சு. ஐயர் நினைவகம் எனும் பெயரில் நினைவு இல்லமாக்கப்பட்டுள்ளது. இங்கு நூலகம் அமைக்கப்பட்டுள்ளது. வ.வே.சு. ஐயர் வாழ்க்கை வரலாறு தொடர்பான புகைப்படங்கள் கண்காட்சியாக வைக்கப்பட்டுள்ளன. மேலும் இவரது நினவாகத் சேரன்மகாதேவியில் வ.வே.சு. ஐயர் மாணவர் விடுதி உள்ளது.



நாளை நமதே

# தோற்காமல் வென்றவர்கள் யாரும் இல்லை. தோற்று விட்டோம் என்று கவலைப்படாமல் வெல்வது எப்படி என்று யோசி வெற்றி நிச்சயம் ஒருமுறை கிடைக்கும்.

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :
9597887847
8870884969



## அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com